S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் டிசம்பர் 11 * 2025 * மலர் -1 * இதழ்-193* VOL-1 * ISSUE-193 விலை ரூ.3 * பக்கம் -4

# ஓய்வு பெற்ற 42 பத்திரிகையாளர்களுக்கு மாதம் ரூ.12,000 ஓய்வூதியம்!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆணைகளை வழங்கினார்!!



**சென்னை, டிச.** 11

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்கு தலா 12 ஆயிரம் ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஆணைகளை வழங்கினார்.

பத்திரிகையாளர்களின் பணியினை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாட்டில் முதன்முறையாக உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். பத்திரிகையாளர்நலவாரியத்தில்தற்போது வரை 3674 நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, 81 பத்திரிகையாளர்களுக்கு ரூ.8,56,500/ உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10,000–லிருந்து ரூ.12,000–ஆக 14.06.2023 முதல் உயர்த்தப்பட்டு, 356 பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.5,000–லிருந்து ரூ.6,000–ஆக ஜூன் 2023 முதல் உயர்த்தப்பட்டு 72 பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை 125 பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமும், 27 பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், புகைப்படக்காரர், செய்தியாளர், பிழை திருத்துநர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரிட்டால் அவர்கள் குடும்பத்தினருக்கு முதலமை ச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி ரூ.1.25 லட்சம் என்பதை ரூ.2.50 லட்சமாகவும், ரூ.2.50 லட்சம் என்பதை ரூ.5 லட்சமாகவும், ரூ.3.75 லட்சம் என்பதை ரூ.7.50 லட்சமாகவும், ரூ.5 லட்சம் என்பதை ரூ.10 லட்சமாகவும் இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்டு வரும் மருத்துவ உதவித் தொகைரூ.2,00,000/லிருந்துரூ.2,50,000/ ஆக 19.7.2022 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது. பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்குத் திராவிட மாடல் அரசு, பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதந்திர ஓய்வூதியமாக தலா ரூ.12 ஆயிரம் வழங்கிட 27.11.2025 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி, பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்கும் தலா 12 ஆயிரம் ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், கத்தாங்கண்ணி நொய்யல் ஆற்றுப்படுகைகயில் உள்ள கிணற்றிலிருந்து நீரேற்று முறையில் காங்கேயம் வட்டத்திற்குட்பட்ட பாலசமுத்திரம்புதூர், கத்தாங்கண்ணி மற்றும் கணபதிபாளையம் ஊராட்சிகளில்உள்ள20எண்ணிக்கையிலானகுளம்,குட்டைகள்மற்றும்தடுப்பணைகளுக்கு நீர்செறிவூட்டல்திட்டத்தினை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார். அருகில் கலெக்டர் மனிஷ் நாரணவரே, தலைமை பொறியாளர் முருகேசன், 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், அகசிப்பள்ளி ஊராட்சி, மேலேரிக்கொட்டாய் பகுதியில் ரூ.2 கோடியே 66 லட்சம் மதிப்பில் அமைக்கப்படவுள்ள தார் சாலை பணிகளுக்கு அமைச்சர் அர.சக்கரபாணி பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்தார். உடன் கலெக்டர் தினேஷ்குமார், எம்.எல்.ஏ.க்கள் மதியழகன், பிரகாஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி மதிப்பில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டுள்ள விக்டோரியா பொது அரங்கத்தினை மேயர் ஆர்.பிரியா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, ஆணையாளர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கம்பத்தில் பரிதாபம்:

# சுடு தண்ணீரில் தவறி விழுந்து குழந்தை பலி!

### குளிப்பதற்காக தாய் வைத்திருந்த போது விபரீதம்!!

**கம்பம்,டிச.**11–

தேனி மாவட்டம், கம்பம் தாத்தப்பன் குளத்தை சேர்ந்தவர் ராஜேஷ் கண்ணன். இவரது மனைவி கீர்த்திகா. இவர்களுக்கு பிரதிப்தாஸ்ரீ, பிரணிவிகா ஸ்ரீ என்ற இரண்டு குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் கடந்த 1ம் தேதி தாய் கீர்த்திகா குளிப்பதற்காக சுடு தண்ணீர் காயவைத்து வீட்டில் இறக்கி வைத்துள்ளார்.



அப்போது விளையாடிக் கொண்டிருந்த பிரணிவிகா ஸ்ரீ கொதிக்கும் சுடு தண்ணீரில் கால்தவறி விழுந்துள்ளார்.

இதில் குழந்தைக்கு உடல் முழுவதும் படுகாயம் ஏற்பட்டு உள்ளது. உடனடியாக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பிரணிவிகா ஸ்ரீ சிகிச்சை பலனின்றி பரிதாப மாக உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக தந்தை ராஜேஷ் கண்ணன் கொடுத்த புகாரின் பேரில், கம்பம் வடக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் நடந்த நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை அமைச்சர் மதிவேந்தன் வழங்கினார். உடன் கலெக்டர் துர்காமூர்த்தி உள்பட பலர் உள்ளனர்.



தொடர்மழையால்தேனி மாவட்டம்,போடிஅருகேகோம்பை ஆற்று அருவியில்தண்ணீர் அதிகளவில் கொட்டுகிறது.

## மதுக்கடையில் ஏற்பட்ட முன்விரோத தகராறில்

# கோவை கால் டாக்ஸி டிரைவர் கத்தியால் குத்திக்கொலை!

**வேடசந்தூர், டிச.**11–

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் குங்குமகாளியம்மன்கோவில் தெருவில் குடும்பத்துடன் வசித்துவரும் செந்தில் (27) இவர் கோயம்புத்தூரில் தங்கி தனியார் கால் டாக்ஸி ஓட்டி வருகிறார்.

இவர் கடந்த சில மாதங்களுக்கு வேடசந்தூருக்கு வந்தபோது குங்கும காளியம்மன் கோவில் தெருவில் உள்ள அரசு மதுபான கடை அருகே உள்ள மீன் கடையில் வேலை பார்க்கும் லட்சுமணம்பட்டியைச்சேர்ந்தமுத்துக்குமார் என்பவருக்கும் மது போதையில் வாய் தகராறு ஏற்பட்டு பிறகு இருவரும் தாக்கிக் கொண்டார்கள்.

இதில் செந்தில் தாக்கியதில் முத்துக்குமார் காயம் அடைந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். இந்நிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) கோவையில் இருந்து வந்த செந்தில் நண்பர்களுடன் மது அருந்திவிட்டு இரவு 9 மணிக்கு வேடசந்தூர் திண்டுக்கல் சாலையில் நாகம்பட்டியை அடுத்து தனியார் நூற்பாலை முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்ற பொழுது அங்கு வந்த முத்துக்குமார் செந்திலை தடுத்து நிறுத்தி கத்தியால் சரமாரியாக குத்தி விட்டு அங்கிருந்து தப்பி சென்று விட்டார்.



இதில் படுகாயம் அடைந்து உயிருக்கு போராடிய செந்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தகவல் அறிந்த வேடசந்தூர் போலீசார் சம்பவ இடத்திற்கு விரும்பி சென்று செந்திலின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வேடசந்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து வேடசந்தூர் போலீசார் வழக்கு பதிவு செய்து கால் டாக்ஸி டிரைவர் செந்திலை கத்தியால் குத்தி கொலைசெய்த முத்துக்குமாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



மேயர் ஆர்.பிரியா , சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி மதிப்பில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டுள்ள விக்டோரியா பொது அரங்கத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மேலூரில் ஓய்வு பெற்ற

# அரசு அலுவலர்கள் சங்கம் சார்பில் இலவச மருத்துவ முகாம்!

மேலூர் டிச.11

மேலூர் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள் சங்கம் மற்றும் மதுரை வாசன் கண் மருத்துவமனை, மேலூர் ராவ் மருத்துவ மனை இணைந்து நடத்திய சிறப்பு கண் பரிசோதனை மற்றும் பொது மருத்துவ முகாம் மேலூர் மூவேந்தர் பண்பாட்டுக் கழ கத்தில் நேற்று 9ம் தேதி நடைபெற்றது. சங்க தலைவர் தர்ம லிங்கம், சங்க செயலாளர் பெரியரசன் என்ற சீனிவாசன், பொருளாளர் வீரபாண்டி ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.



மேலூர் வட்டாட்சியர் செந்தாமரை, மேலூர் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் லயனல் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலூர் கருவூல அலுவலர் கே.குமரன், சார்நிலை கருவூலர் சிவக்குமார், மேலூர் பெரியாறு ஒரு போக பாசன விவசாய சங்க தலைவர் எம்.முருகன் ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாக கலந்து கொண்டனர். மதுரை வாஸன் கண் மருத் துவமனையின் தலைமை மருத்துவ இயக்குநர் டாக்டர். கமல் பாபு மற்றும் டாக்டர் ரம்யா கண் சம்பந்தப்பட்டமான நோய்களுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியத்துக்குட்பட்ட, மாடப்பள்ளி ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை பள்ளிக்கல்வித்துறை சார்பில். மடவாளம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அரசு சார்பில் விலையில்லா மிதிவண்டிகளை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ. நல்லதம்பி கலந்து கொண்டு மாணவ மாணவி களுக்கு வழங்கி சிறப்புரையாற்றினார்.



## பவர் கிரிட் கார்ப்பரேஷன் சார்பில்

# நாவலூர் அரசு பள்ளிக்கு ரூ.20 லட்சத்தில் கல்வி உபகரணங்கள் விநியோகம்!

ஸ்ரீபெரும்புதூர், டிச.11

பவர்கிரிட்கார்ப்பரேஷன்நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ், நாவலூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ. 20 லட்சத்தில் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

காஞ்சிபுரம்மாவட்டம்,ஸ்ரீபெரும்புதூர் அடுத்த கொளத்தூர் ஊராட்சிக்கு உட் பட்ட நாவலூர் பகுதியில் அரசு உயர்நி லைப் பள்ளி இயங்கி வருகிறது. இந்தப் பள்ளியில், நாவலூர், கொளத்தூர், வெள் ளாரை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர் கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில், பவர் கிரிட் கார்ப்பரேஷன் (மின் கட்டமைப்பு நிறுவனம்) நிறுவனத் தின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில், கணிணி, நகல் இயந்திரம், அச்சு இயந்திரம், 5 வகுப்பறைகளில் ஸ்மார்ட் போர்ட், ஆசி ரியர்களுக்கு கைக்கணினி உள்ளிட்ட கல்வி உபரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கொளத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் (பொறுப்பு) வெள்ளாரை அரிகிருஷ்ணன் தலைமையில் நடை பெற்றஇந்தநிகழ்ச்சிக்கு,பள்ளிதலைமை ஆசிரியர் விஜயகுமார் முன்னிலை வகித் தார்.

இதில் பவர் கிரிட் கார்ப்பரேஷன் நிறு வனத்தின் இயக்குனர் ரவிசங்கர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கல்வி உபகரணங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், பவர் கிரிட் கார்ப்ப ரேஷன் நிறுவனத்தின் முதுநிலை பொது மேலாளர் (நிதி) சம்பத்குமார், முதுநிலை துணை பொது செயலாளர் நந்தகுமார், பூஜ்ய ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் சீடர் பம் மல் பாலாஜி, மாகான்யம் ஊராட்சிமன்ற தலைவர் சாந்தி சீனிவாசன், நாவலூர் வார்டு உறுப்பினர் ஜெயலட்சுமிசேகர் உள்ளிட்ட பள்ளி மாணவர்கள் மாணவர் களின் பெற்றோர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஒகூரில், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அதிமுக அலுவலகத்தில் விசிக உள்ளிட்ட மாற்று கட்சிகளை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர். இந்த இணைப்பு நிகழ்ச்சியின்போது பாலகிருஷ்ணா ரெட்டி அனைவருக்கும் அதிமுகவின் கருப்பு, வெள்ளை, சிகப்பு கட்சி துண்டை அணிவித்து வரவேற்றார்.



## புதுக்கோட்டை அருகே

# வாரத்தில் ஒரு நாள் மாற்றுச்சீருடை;மாணவர்களுக்கு பள்ளி வளர்ச்சி குழு சார்பில் வழங்கள்!

புதுக்கோட்டை,டிச.11

புதுக்கோட்டை அருகே வாரத்தில் ஒரு நாள் மாற்று சீருடை அரசு பள்ளி மாண வர்களுக்கு வளர்ச்சி குழு சார்பில் வழங் கியதையடுத்து பொது மக்கள் பெற்றோர் கள் பாராட்டு தெ ரிவித்தனர்.

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி யின் தலைமை ஆசிரியர் யோகாம்பாள் தலைமையேற்று அனைவரையும் வர வேற்று பேசினார். குளமங்கலம் தெகுகு ஊராட்சி ஒன்றிய அரசு உய ர்நிலைப் பள் ளியின் உதவி தலைமை ஆசிரியர் ஜெக தீஸ் முன்னிலையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள குளமங்க லம் தெற்கு ஊராட்சியில் அரசு ஊராட்சி ஒன்றிய நடு நிலை ப்பள்ளி உள்ளது. இப்பள்ளி 5ம் வகுப்பு வரை உள்ளது. பள்ளி யில் 60க்கு ம் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் பயின்றுவருகின்றனர். இப்பள்ளிமாணவ மாணவிகள் 5 நாட்களும் பள்ளி குழந்தை கள் ஒரே சீருடை அணிந்து வருவதாக கூறப் பட்டது..

இதையடுத்து பள்ளியின் வளர்ச்சி குழு சார்பில் வாரத்தில் ஒரு நாள் பள்ளி குழந் தைகளுக்கு மாற்று சீருடை வழங்க குழு சார்பில் (ஆதாவது வாரத்தில் ஒரு நாள் புதன்கிழமை மட்டும் ) மாணவர்கள் இந்த சீருடையை அணிவது என முன் னேற்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட் டது. இந்த நிலையில் நேற்று காலை வழி பாடு முடிந்து பள்ளி வ ளர்ச்சி குழு, அப் பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் அர சு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர்களுடன் மா ணவ மாணவிக ளுக்கு பள்ளி வளாகத்தில் சீருடைகள் நேற் று வழங்கப்பட்டது.

சீருடை வழங்கும் நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியைகள் மாண வர் பெற்றோர்கள் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.வளர்ச்சி குழு சார்பில் வடிவேல் நன்றி கூறினார்.



நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம் கல்குறிச்சி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



# திருப்பத்தூரில் மத்திய அரசை கண்டித்து கட்டுமான அமைப்புசாரா தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்!

திருப்பத்தூர் டிச 11

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சி பாரத ஸ்டேட் வங்கி எதிரில் கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் கூட்டமைப்பு, தமிழ் நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, தமிழக கட்டிட தொழிலாளர்கள் மத்திய சங்கம் சார்பில் மத்திய அரசு புதி தாக கொண்டு வந்துள்ள தொழிலாளர் சட்டங்களை திரும்ப பெற வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கூட் டமைப்பு தலைவர் நாகேந்திரன் தலை மையில் நடைபெற்றது. மாவட்ட கூட் டமைப்பு செயலாளர் முனிரத்தினம் முன்னிலை வகித்தார். இதில் மாநில

பொதுச்செயலாளர் குருநாகலிங்கம், மாநிலத் துணைத் தலைவர் பாலகிருஷ் ணன், மாநில இணை செயலாளர் மனோகரன், ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட தலைவர் ராஜி, அமைப்பு செயலாளர் கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு மத்திய அரசின் புதிய தொழிலாளர் சட்டங்களை திரும்ப பெற வலியுறுத்தி கண்டன உரையாற்றி னர்.

இந்த நிகழ்வில் நிர்வாகிகள் அனுமந் தன், பூபதி, சக்தி, சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ராமகிருஷ்ணா பள்ளி நிறுவனர் பிறந்தநாள் விழா!

சிதம்பரம், டிச.11

சிதம்பரம், டிச 10 சிதம்பரம் ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்யா சாலா மேல்நிலைப் பள்ளியை நிறுவிய செ. ரத்தினசாமி 118 வது பிறந்தநாள் விழா பள்ளி வளாகத்தில் நடைபெற் றது. பள்ளி நிர்வாகக்குழுத்துணைத்தலைவர் எஸ். ஆர். திருநாவுக்கரசு தலைமை வகித்தார். தலைமையாசிரியர் பா. சங்கரன் முன்னிலை வகித்தார். ஆசிரியை எம். திருமகள் வரவேற்றார். அண்ணாமலைப் பல்கலை மேனாள் துறைத்தலைவர் பேராசிரியர் டி. இளங்கோவன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினார். பரதநாட்டியம், தனிப்பாடல், கிராமிய நடனம், புராண நாடகம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. பல்வேறு அறக்கட்டளைகளின் சார்பில் நடைபெற்ற போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டது. முதுகலை ஆசிரியர் ஆர். அன்பரசன் நன்றி கூறி னார். விழாவிற்கான ஏற்பாடுகளை உதவித் தலைமை ஆசி ரியை டி. சுந்தரி, ஆசிரியர்கள் என். சுரேஷ்குமார், மு. கல்யாணராமன், அ. கார்த்திக் உள்ளிட்டோர் செய்திருந்த னர். விழாவை முன்னிட்டு சிதம்பரம் அரசு மருத்துவமனை உள் மருத்துவ பயனாளர்களுக்கு பிரட் வழங்கப்பட்டது.





திருவள்ளூர்மாவட்டஆட்சியர்அலுவலகசிறப்புமக்கள்குறைதீர்க்கும்நாள்கூட்டரங்கில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ் அவர்கள் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, வெங்கடேஷன் த/பெ முத்தழகன் என்ற மாற்றுத்திறனாளிநபர்ஒருவருக்குரூ.11,445மதிப்பிலானமூன்றுசக்கரகைவண்டியினையும், குமார் த/பெ நடராஜன் என்ற மாற்றுத்திறனாளி நபர் ஒருவருக்கு ரூ.550 மதிப்பிலான முழங்கை ஊன்றுக்கோல் ஆகியவற்றை வழங்கினார். உடன் தனித் துணை ஆட்சியர் (சபாதி) பாலமுருகன், மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



## ஊரணி கரையை சரி செய்ய கோரி

# மார்க்சிஸ்ட் கம்யூ. கட்சி சார்பில் காத்திருக்கும் போராட்டம்!

ராஜபாளையம் டிச 11

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே மேல ராஜகுலராமன் கிராமத்தில் உள்ள அரசு ஊரணி இல் தென் பக்கம் உள்ள கரை சேதப்படுத்தப்பட்டு பழுது அடைந்து இருந்தது இந்த கரையை உடனடியாக சரி செய்ய கோரி பலமுறை அதிகாரிகளுக்கு மனு செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை எனவே ராஜபாளையம் ஒன்றிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மேல ராஜகுல ராமன் கிராம நிர்வாக அலுவ லகம் முன்பு காத்திருக்கும் போராட்டம் நடைபெற்றது. ஒன்றிய குழு உறுப்பினர் கே. சஞ்சீவி நாச்சியார் தலைமையில் விருது நகர் மாவட்ட செயலாளர் குருசாமி, ஒன்றிய செயலாளர் முனியாண்டி, மாவட்ட செயற் குழு உறுப்பினர் மகாலட்சுமி, ஆர் சோமசுந் தரம், உள்பட பலர் கலந்து கொண்டு பேசி னார்கள். கூட்டத்தில் பாத்திரம் வைத்து சமையலுக்கு ஏற்பாடு செய்ததால் ராஜபா ளையம் போலீசார் தடுத்தனர். இதன் காரண மாக சிறிது நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது.

# அனந்த் தேசிய பல்கலைக்கழகத்தின் 7வது பட்டமளிப்பு விழா!

## டாக்டர் ஸ்ரீதர் வேம்பு தலைமை விருந்தினர்!!



சென்னை டிச 11

சென்னை அனந்த் தேசிய பல்கலைக்கழகம் தனது 7வது பட்டமளிப்பு விழாவைகமாக நடத்தி, இளங்கலை வடிவ மைப்பு, கட்டிடக்கலை, முது கலை வடிவமைப்பு, சஸ்டெ யினபிலிட்டி மற்றும் அனந்த் பெல்லோஷிப் போன்ற பல பாடத்திட்டங்களில் 299 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கியது. விழாவின் தலைமை விருந்தினராக பத்மா ஷ்ரீ டாக்டர் ஸ்ரீதர் வேம்பு கலந்து கொண்டு, மாணவர்களின் படைப்பாற்றல், புதுமை மற்றும் நாட்டிற்கான பங்களிப்பு குறித்து பாராட்டுக்களை தெரிவித்தார். அவருடன் பல்கலைக்கழக தலைவர் அஜய் பீரமால், ப்ரொவாஸ்ட் டாக்டர் சஞ்சீவ் வித்யார்தி மற்றும் வாரிய உறுப்பினர்கள் பங்கேற்றனர். ப்ரொவாஸ்ட் டாக் டர் சஞ்சீவ் வித்யார்தி, இந்தியா விக்சித் பாரத் நோக்கில் முன்னேறும் தருணத்தில் இக்கால பட்டதாரிகள் ஆற்றப் போகும் முக்கிய பங்களிப்பை வலியுறுத்தினார்.

முன்னதாக அனந்த் தேசிய பல்கலைக்கழக விழாவை சுதா மூர்த்தி, எஸ். பி. வி. தோஷி, எஸ். என். சந்திரசேகரன், ஆர். என். ரவி போன்ற முக்கிய பிரமுகர்களும் சிறப்பித்துள்ளனர்.

## சோனியா காந்தியின் 79 வது பிறந்தநாள்:

# உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் காங். கட்சியினர் கேக் வெட்டி ,இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்!

உளுந்தூர்பேட்டை டிச .11

கள்ளக்குறிச்சி மாவட்டம் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உளுந்தூர் பேட்டை சட்டமன்ற தொகுதி சார்பாக, தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களின் 79 வது பிறந்தநாளை கேக் வெட்டி இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினார்கள், இந்நிகழ்ச்சியில் தலைமை நகரத் தலைவர் வழக்கறிஞர் சுரேஷ்குமார், சிறப்பு அழைப்பாளர்கள், மாவட்ட துணைத் தலைவர் இதயத் துல்லா, மாநில துணைத்தலைவர் எஸ் சி பிரிவுமுனைவர்சீனிவாசன், நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர், சேவாதளம் மாவட் டத் தலைவர் மீடியா முருகன், இந்நி கழ்ச்சியில் கலந்து கொண்ட பொறுப்பா ளர்கள், கோட்டை வட்டாரத் தலைவர் விஜயகுமார், தக்கா வட்டாரத் தலைவர் ஷேக் சவாத், ஆதனூர் வட்டாரத் தலை வர் கலைமணி, மகிலா காங்கிரஸ் அமுதா, நகர மன்ற உறுப்பினர் ரஷீத், வண்டி பாளையம் ராமச்சந்திரன், சேந்த நாடு வட்டார தலைவர் காசிநாதன், சங்க ராபுரம் வட்டாரத் தலைவர் பிரபு, சங்கரா புரம் சிறுபான்மை பிரிவு நவாஸ்கான், நாராயணன் விவசாய பிரிவு மாவட்டத் தலைவர், பிள்ளையார் குப்பம் பழனி வேல், நைனாகுப்பம் சாரங்கபாணி, மண லூர்பேட்டை ஆறுமுகம், உளுந்தூர் பேட்டை இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் பாரதி, வசந்த் ஜெரால்ட், மயிலா காங்கிரஸ் நிர்வாகிகள், மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், பொதுமக் களும் ஏராளமாக கலந்து கொண்டனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



## ஆம்பூர் அருகே

# வீட்டு உபயோகப்பொருட்கள் தருவதாக பணம் பறித்த கும்பல்

## பொதுமக்கள் மடக்கி பிடித்தனர்!

ஆம்பூர். டிச.11

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த மின்னூர் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இருசக்கர வாகனத்தில் வந்த கும்பல், தாங்கள் விற்கும் சோப்பு வாங்கினால் அதில் விழும் பரிசு கூப்பன் மூலம், டிவி, ஏர் கூல்ர், கேஸ் அடுப்பு, உள்ளிட்ட வீட்டு உபயோகப் பொருட்களை தருவதாகவும், இதற்கு முன் பணம் அளிக்க வேண்டும் எனக்கூறி 7500 ரூபாய் பணத்தை பெற்றுச்சென்ற நிலையில், அவர்கள் அளித்த பொருட்கள் முறையாக வேலை செய்யாத நிலையில், மற்றொரு கும்பல் மீண்டும் சோப் வாங்கினால் பரிசு கூப்பன் தருவதாக வந்த போது, அவர்களை அப்பகுதி மக்கள் மடக்கி பிடித்து, அவர்களை காவல் துறையினரிடம் ஒப்படைத்தனர்,

அதனை தொடர்ந்து அவர்களை கைது செய்த பொலிஸார் அவர்களிடம் விசாரணை செய்த போது, அவர்கள் வெட்டுவானம் பகுதியை சேர்ந்த சுரேஷ், ராஜா மற்றும் பள்ளிகொண்டா பகுதியை சேர்ந்த ராஜா என்பது தெரியவந்துள்ளது,

அதனை தொடர்ந்து அவர்கள் மீது காவல்துறையினர் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்க்கொண்டு வருகின்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே மருதேரி கிராமத்தில் விவசாய தோட்டத்தில் 10 நீளம் உள்ள மலைப்பாம்பு இருந்ததை கண்ட கிராம மக்கள் தகவல் அளித்ததின் பேரில் தீயணைப்புத் துறையினர் வந்து லாவமாக பாம்பை பிடித்தனர்.

## பர்கூர் அருகே

# தம்பதியை தாக்கி 23 பவுன் நகை கொள்ளை!

## உறவினர் உட்பட 3 பேர் கைது!!

கிருஷ்ணகிரி டிச.11

பர்கூர் அருகே தம்பதியை தாக்கி 23 பவுன் நகையை கொள்ளையடித்தவழக்கில், உறவினர் உள்ளிட்ட 3 பேரை போலீசார் கைதுசெய்தனர். பர்கூர் அருகேகல்லேத்துப்பட்டியைச் சேர்ந்த விவசாயி சந்திரசேகர் (55). இவரது மனைவி மஞ்சுளா (50). இவர்கள் பிப்ரவரி 13ம் தேதி வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போது, அதிகாலை 5.30மணி அளவில் வீட்டின் உள்ளே புகுந்த முகமூடி அணிந்த 3 பேர் தம்பதியை தாக்கி, வீட்டிலிருந்த 23 பவுன் நகை மற்றும் ரூ.50,000ஐ கொள்ளையடித்துக் கொண்டு இருசக்கர வாகனத்தில் தப்பினர். இது தொடர்பாக போலீசார் கூறும்போது, "நகை கொள்ளை நடந்த வீட்டில் கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் மின்சாரம் மற்றும் கண்காணிப்பு கேமரா இணைப்புகளை துண்டித்திருந்தனர். இதனால், குற்ற




வாளிகளை அடையாளம் காண்பதில் சிரமம் ஏற்பட்டது. இதனிடையே கொள்ளையில் ஈடுபட்ட 3 பேருக்கும் இடையில் நகையைப் பிரிப்பதில் ஏற்பட்ட தகராறு தொடர்பான தகவல் வெளியில் பரவியது. இதன் அடிப்படையில் நடந்த விசாரணையில் கைதான 3 பேரும் முகமூடி அணிந்து கொள்ளையில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது" என்றனர்.

## பயணத் துறையிலேயே முதன்முறையாக

# தனிப்பயனாக்கப்பட்ட தள்ளுபடி உருவாக்கும் அம்சத்தை redBus அறிமுகப்படுத்தியுள்ளது!

சென்னை டிச.11



உலகின் மிகப்பெரிய ஆன்லைன் பேருந்து டிக்கெட் முன்பதிவு தளமான redBus, பயணத் துறையில் முத ல்முறையாக 'Coupon Creator' என்ற தனிப்பயனாக்கப்பட்ட டிஜிட்டல் அம்சத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பயனர்கள் பிறந்தநாள்கள், திருமணங்கள், கல்லூரி விழாக்கள் போன்ற சிறப்பு நிகழ்வுகளுக்காக தனிப்பட்ட கூப்பன் குறியீடுகளை உருவாக்கி பகிர முடியும். செயலியில் (App) மட்டுமே கிடைக்கும் இந்த அம்சம், புதிய பயனர்களுக்கு 15% (₹400 வரை) மற்றும் ஏற்கனவே உள்ள பயனர்களுக்கு 2% (₹400 வரை) தள்ளுபடிகளை வழங்குகிறது. ஒரு பயனர் மாதத்திற்கு ஒரு கூப்பன் மட்டுமே உருவாக்கலாம்; இது 30 நாட்கள் செல்லுபடியாகும். நிகழ்வின் தீமைத் தேர்வு செய்து, தனித்துவமான கூப்பன் குறியீட்டை உருவாக்கி, WhatsApp மூலம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் உடனடியாக பகிர முடியும். redBus பின்தள தொழில்நுட்பம் கூப்பனை பாதுகாப்பாகச் செயல்படுத்தி, புதிய மற்றும் பழைய பயனர்களை தானாகவே வேறுபடுத்தி, பொருத்தமான தள்ளுபடியை வழங்குகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறைஅமைச்சரும், சென்னைப்பெருநகர்வளர்ச்சிக்குழுமத்தலைவருமானபி.கே.சேகர்பாபு, இராயபுரம் மண்டலம், வார்டு57, பிராட்வே, டேவிட்சன்தெருவில் சென்னை குடிநீர் வாரியம் சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் குடிநீர் தேக்க நிலையம் முன்னேற்றப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தூய்மை பணியாளர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்!

## வாணியம்பாடியில் எஸ்.ஆர்.தேவதாஸ் பேட்டி!!

வாணியம்பாடி, டிச.11



தூய்மை பணியாளர்களுக்கு மாத சம்பளம் 15 ஆயிரம் உள்பட தமிழக அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவெற்ற வேண்டும் என்று வாணியம்பாடியில் ஏ.ஐ.டி.யூ.சி மாநில துணைத்தலைவர் எஸ்.ஆர்.தேவதாஸ் செய்தியாளர்களை சந்தித்து பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

சென்னை பனகல் மாளிகை அருகில் அருகே உள்ள உள்ளாட்சி பணியாளர்கள் அலுவலகம் முன்பாக நேற்று தொழிலாளர்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட ஊரக வளர்ச்சித்துறை தொழிற்சங்கம் சார்பாக போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வாணியம்பாடி பகுதியில் இருந்து ஊரக வளர்ச்சித் துறை தொழிற்சங்க மகளிர் அணி மாநில துணைத் தலைவர் நிர்மலா தலைமையிலான நூற்றுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் போராட்டத்தில் பங்கேற்பதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இதனை அறிந்த காவல்துறையினர் நேற்று முன்தினம் இரவு செட்டியப்பனூர் பகுதியில் உள்அவரது வீட்டிற்கு சென்ற போலீஸார் நிர்மலாவை போராட்டத்தில் பங்கேற்க கூடாது என்றும், மீறி சென்றால் கைது செய்து விடுவோம் என மிரட்டும் தொணியில் பேசி வீட்டின் அருகிலேயே 2 காவலர்கள் நின்று நிர்மலாவை வீட்டுச் சிறை வைத்தது போல் வெளியேற முடியாமல் செய்ததாக கூறப்படுகிறது. தகவலறிந்து ஏ.ஐ.டி.யூ.சி மாநில துணை தலைவர் தேவதாஸ் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை தொழிற்சங்கம் நிர்வாகிகள் நேரில் சென்று தமிழக போலீஸாரின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்தனர்.

மேலும் கரோனா காலத்தில் பணியாற்றிய தூய்மை பணியாளர்களுக்கு 15 ஆயிரம் மாத ஊதியம் வழங்கப்படும் என எதிர்கட்சியாக இருந்த திமுக வாக்குறுதியை அளித்திருந்தது. திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் தூய்மை பணியாளர்களுக்கு மாதம் 18 ஆயிரம் ரூபாய் ஊதியம் வழங்கப்படும் என அரசாணை வெளியிட்டது. ஆயினும் இதுவரை அதனை நிறைவேற்றவில்லை.

மேலும் கொரோனாகாலத்தில்தூய்மை பணி செய்த பணியாளர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டும், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு மாதம் 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும்.

திராவிட மாடல் அரசு, சமூக நீதி அரசு எனகூறிக்கொள்ளும்திமுகஅரசுதூய்மை பணியாளர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றார். பேட்டியின் போது ஊரக வளர்ச்சித் துறை தொழிற்சங்க மாநில துணைத் தலைவர் நிர்மலா, ஏ.ஐ.டி.யூ.சி நகர செயலாளர் சிராஜ் கான், தொழிற்சங்க நிர்வாகிகள், தூய்மை பணியாளர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாராபுரத்தில் திருப்பூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.தென்னரசு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார் உடன் காங்கிரஸ் கட்சியின் நகரத் தலைவர் செந்தில்குமார், நகர துணைத் தலைவர் வேலுச்சாமி, மாவட்ட செயலாளர்கபூர், இளைஞர்காங்கிரஸ் மாவட்டதலைவர் ரகுநாத், INTUC மாவட்டத்தலைவர் ராஜேந்திரன், சீனிவாசன், மகிளாகாங்கிரஸ் மாலதி, சரோஜினி, அசோக்குமார், அக்கீம்அமீர், மற்றும் காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# அரூர் நகராட்சி அலட்சியம்; குப்பைகள் தேக்கம், நோய்களின் அபாயம்!







தருமபுரி மாவட்டத்திலுள்ள அரூர் நகரம், சமீபத்தில் நகராட்சியாக தரம் உயர்ந்திருந்தாலும், தூய்மைப் பணிகளில் நிலவும் அலட்சியம் தற்போது குடியிருப்போரின் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

2025 செப்டம்பரில், அரூர் பேரூராட்சியுடன் மோப்பிரிப்பட்டி மற்றும் தொட்டம்பட்டி ஊராட்சிகள் இணைக்கப்பட்டு, புதிய அரூர் நகராட்சி உருவாக்கப்பட்டது. 1945இல் பேரூராட்சியாகத் தொடங்கிய அரூர், 1969 இல் தேர்வு நிலை பேரூராட்சியாக, 2023இல் சிறப்பு நிலை பேரூராட்சியாக, இறுதியில் 2025இல் நகராட்சியாக உயர்ந்தது.

இந்த முன்னேற்றத்தை 2024 ஜூலை 11 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார். அரூர் நகரத்தின் நிலைமைகள் தருமபுரி நகரத்திலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ள அரூர் நகரம் தற்போது 21.69 சதுர கி.மீ. பரப்பளவில் 30 வார்டுகளைக் கொண்டுள்ளது. நகரத்தின் மொத்த மக்கள் தொகை சுமார் 48,000. பஸ் நிலையம், வங்கிகள், பள்ளிகள், கல்லூரிகள் என அடிப்படை வசதிகள் இருந்தாலும், தூய்மை பணிகள் குறைவாக இருப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நகராட்சி ஆண்டு வருவாயாக ₹7.50 கோடி இருப்பதுடன், 100 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில் 43 பேர் தூய்மைப் பணியாளர்கள். தினசரி சுமார் 7 டன் குப்பை சேகரிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் கூறினாலும், மழைக்காலத்தில் குப்பைகள் குவிந்து சாலைகளில்

துர்நாற்றம் வீசுகிறது. குப்பை தேங்கலால் நோய் பரவல் அபாயம் தூய்மைப் பணிகள் முறையாக நடைபெறாததால், மூலை முடுக்குகளிலும், கால்வாய்களிலும் குப்பை தேங்கி நிற்கிறது. இதனால் டெங்கு, சளி, காய்ச்சல், இருமல் போன்ற தொற்றுநோய்கள் பரவுவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியோர் அதிகம் பாதிக்கப்படுவதாக குடியிருப்பு மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கழிவு அகற்றும் பணிகளில் ஈடுபடுகிற பணியாளர்கள் பாதுகாப்பு உபகரணங்கள் இன்றி வேலை செய்வதாலும் அவர்களின் உடல்நலமும் ஆபத்தில் உள்ளதாக கூறப்படுகிறது. பொதுமக்களின் கோரிக்கைநகராட்சி நிர்வாகம் குப்பை அகற்றல், சாலைகள் மற்றும் கால்வாய் சுத்தம், கொசு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாக தீவிரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது. பலர் மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கள் கொடுத்தும் இதுவரை தெளிவான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். அரூர்நகராட்சி அலட்சியம் குறித்து மக்கள் கேள்வி எழுப்பியுள்ள நிலையில், பொது சுகாதாரப் பிரச்சினைகளை தவிர்க்க உடனடி சீரமைப்பு தேவைப்படுவதாக வேண்டுகோள்கள் எழுந்துள்ளன.





## திருமுண்டீச்சரம் கிராமத்தில்

# அரசூர் திருவெண்ணெய்நல்லூர் சாலையில் தரைபாலம் அமைக்கும் இடத்தில் தற்காலிக சாலை அமைக்க கோரி பொதுமக்கள் சாலை மறியல்!

## தாசில்தார் பேச்சுவார்த்தையில் சுமூக தீர்வு!!

திருவெண்ணெய்நல்லூர், டிச.11

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள கிராமம் (எ) திருமுண்டீச்சரம் கிரா மத்தில்அரசூர்திருவெண்ணெய்நல்லூர்சாலையில் முன்அறிவிப்பின்றி தரைபாலம் அமைக்கும் இடத்தில் தற்காலிக சாலை அமைக்க கோரி பொதுமக்கள் சாலை மறியல் அறிவித்த நிலையில் தாசில்தார் பேச்சுவார்த்தையில் சுமூக தீர்வு காணப்பட்டு சாலை அமைக்கும் பணி நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டம் திருவெ ண்ணெய்நல்லூர் அருகே உள்ள கிராமம் என்கின்ற திருமுண்டீச்சரம் கிராமத்தில் ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில் அரசூர் திருவெண்ணெய்நல்லூர் சாலையில் தமிழக நெடுஞ்சாலைத்துறை மூலம் ரூ.35 லட்சம் மதிப்பில் தரைப்பாலம் அமைக்கும் பணிக்கான வேலைகள் இன்று தொடங்கியது. தரைப்பாலம் அமைப்பதற்கான பணியின் விவரத்தினை முன்கூட்டியே பொது மக்களுக்கு தெரிவிக்காமல் சாலையின் இரு பக்கங்களிலும் அரசூர் மற்றும் திருவெண்ணெ ய்நல்லூர் ஆகிய இடங்களில் சாலையை மூடி தடுப்பை ஏற்படுத்தி மாற்று சாலையில் செல்ல பலகை வைத்னர். இதனால் பேருந்துகள் வராமலும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் பொது மக்கள் செல்ல முடியாமல் மிகுந்த சிரமப்பட்டனர். இதனால் ஆத்திரம் அடைந்த கிராம பொதுமக்கள் சாலை மறியல் செய் போவதாக அறிவிப்பு செய்தனர். இது பற்றி தகவல் அறிந்த திருவெண்ணெய்நல்லூர் தாசில்தார் ரகுராமன், நெடுஞ்சாலைத் துறை உதவி பொறியாளர் விஜயலட்சுமி, சப் இன்ஸ்பெக்டர் அன்பழகன் மற்றும் போலீசார் சாலை மறியல் செய்ய இருந்த பொது மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையில் தரைப்பாலம் அமைக்கும் இடத்தில் தற்காலிக சாலை அமைத்து தர வேண்டும் என கூறினார்கள் உடனடியாக அமைத்து தரப்படும் என கூறினர். இதனால் பொதுமக்கள் சாலைமறியலை போராட்டத்தை கைவிட்டனர். அதன் பிறகு தற்காலிக சாலை அமைக்கும் பணி நடைபெற்று பொதுமக்கள் வாகனங்கள் சென்றன.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, தாராபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப்பணியாளர்களுக்கு நல வாரிய அட்டைகளை அமைச்சர் கயல்விழி செல்வராஜ். வழங்கினார். உடன் தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செந்தில்குமார், தாராபுரம் கிழக்குஒன்றியகழகபொறுப்பாளர்துரைசாமி,தாராபுரம்முன்னாள்ஊராட்சிஒன்றியக்குழுத் துணைத்தலைவர் சசிக்குமார், தாராபுரம் ஒன்றிய துணைச் செயலாளர் செல்வக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தூய்மைப்பணியாளர்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் பங்கேற்ற கூட்டம் - அமைச்சர்,மேயர் பங்கேற்பு!



தூத்துக்குடி,டிச.11

தூத்துக்குடி முதலமைச்சர் முக ஸ்டாலின் தலைமையில் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" எனும் தலைப்பிலான ஆலோசனைக் கூட்டம் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. அதனடிப்படையில் எட்டையாபுரம் சாலையில் உள்ள வடக்கு மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அரங்கில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர்உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தலைமையில் நடைபெற்றது. கானொளி காட்சி மூலம் திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான முக. ஸ்டாலின் வடக்கு மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளில் நடைபெற்ற எஸ்ஐ ஆர் பணி கட்சி வளர்ச்சி பணி குறித்து கேட்டறிந்ததை மட்டுமின்றி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்ட பின்பு அதை ஆய்வு செய்து விடுபட்டிருந்த வாக்காளர்களையும் முழுமையாக இணைத்த பின்பு தான்நாம் முழுமையாக முழுகிணறையும் தாண்டியதாக அர்த்தம் அப்போது தான் நமக்கான முழு வெற்றியை பெறுவதற்கு களப்பணி ஆற்றியுள்ளோம் என்பதற்கான அர்த்தம் என்று தெரிவித்துள்ளார்.

காணொலி காட்சி கூட்டத்தில் மேயர் ஜெகன்பெரியசாமி மாநகரதிமுக செயலாளர் ஆனந்தசேகரன், விளாத்திகுளம் தொகுதி பொறுப்பாளர் பெருமாள் கோவில்பட்டி தொகுதிபொறுப்பாளர் கணேசன், ஒன்றிய செயலாளர்கள் காசி விஸ்வநாதன், முருகேசன், சின்னப்பாண்டியன், சின்னமாரிமுத்து. செல்வராஜ், ராதாகிருஷ்ணன், மூம்மூர்த்தி, இம்மானுவேல், உள்பட மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர்களுடன் கலந்து கொண்டனர்.



## தி.மு.க. அரசின் 4 ஆண்டு ஆட்சியில்

# 43 லட்சம் பெண்கள் பயனடைந்துள்ளனர்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேட்டி!!

கிருஷ்ணகிரி,டிச.11

கிருஷ்ணகிரியில், தமிழ்நாடு விவசாய சங் கங்களின் கூட்டு இயக்கம் சார்பில், கிருஷ்ணகிரி மாவட்ட பெண் விவசாயிகள் மாநாடு நடந்தது. மாநாட்டிற்கு மாநில பொதுச்செயலாளர் கோமலா தலைமை வகித்தார். மாநில தேசிய மகளிரணி செயலாளர் சக்திசங் கர் வரவேற்றார். தமிழ்நாடு விவசாயிகளின் கூட்டு இயக்க தலைவர் தெய்வ சிகாமணி மாநாட்டை தொடங்கி வைத்தார். இதில் வேளாண்மைதுறை அமைச்சர் எம் ஆர்கே. பன்னீர் செல்வம், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச் சர் சக்கரபாணி, எம்எல் ஏக்கள் பர்கூர் மதியழகன், ஒசூர் பிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில், மாநில மகளி ரணி செயலாளர் பெருமா காசி, செயல் தலைவர் எழி லன், பொதுச்செயலாளர் ஆல்பர்ட் அந்தோணி, துணை பொதுச்செய லாளர் ராஜா, காவேரி பாசன விவசாயிகள் சங்கம் பார்த்தசாரதி, மாநில மகளிரணி நிர்வாகிகள் திண்டுக்கல் சந்திரகாந்தா, ஈரோடு விஜயலட்சுமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க அவைத்தலைவர் நசீர்அக மது,சித்ரா ராஜேந் திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பேசினர்.

பின்னர், அமைச்சர் கள் எம்ஆர்கே. பன்னீர் செல்வம், நிருபர்களிடம் கூறும் போது:

திமுக அரசு பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில், வளாண்மை உழவர் நலத் துறையின் 27 திட்டங்கள் மூலமாக வேளாண்மை துறை சார்பில் 24 லட்சத்து 18 ஆயிரத்து 358 மகளிரும், தோட்டக்கலைத்துறை சார்பில் 18 லட்சத்து 96 ஆயிரத்து 456 மகளிரும் என மொத்தம் 43 லட்சத்து 14 ஆயிரத்து 814 மகளிர் பயனடைந்து உள்ளனர் என்றார்.



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் சோனியா காந்தி பிறந்த நாளை முன்னிட்டு காங்கிரஸ் கட்சி சார்பில் விநாயகர் கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

## சேலம் சூரமங்கலம் அருகே

# டாஸ்மாக் கடையில் மோதல்; வாலிபர் மீது பாட்டிலால் தாக்குதல்!

## 2 பேருக்கு வலைவீச்சு!!

சேலம் டிச.11

சேலம் சூரமங்கலம் அருகே புதுரோட்டில் டாஸ்மாக் மதுபான கடை அமைந்துள்ளது. இந்த



டாஸ்மாக் பாரில் இருந்து, வாலிபர் ஒருவர் வெளியே வந்தார். அவரை பின்தொடர்ந்து 2 வாலிபர்கள் வந்து, அவரிடம் தகராறு செய்தனர். அப்போது, அவரை சரமாரி தாக்கி கீழே தள்ளினர்.

பிறகு குடிபோதையில் அந்த வாலிபர் மீது, மது பாட்டில்களை வீசி எறிந்து தாக்கினர். காது பகுதியில் ரத்தம் கொட்டிய நிலையில் அவர் அலறினார். அருகில் நின்றிருந்த வாலிபர்கள் இந்த தாக்குதலை கண்டித்தனர். இதனால் தாக்குதலில் ஈடுபட்ட 2 பேரும், அங்கிருந்து சென்றுவிட்டனர். சிறிது நேரத்தில் அடிபட்ட வாலிபரும், அங்கிருந்து எழுந்துச்சென்றார். இந்த கொடூர தாக்குதல் சம்பவத்தை, அங்கிருந்த சிலர் செல்போனில் வீடியோ எடுத்துள்ளனர். அந்த வீடியோ, வாட்ஸ்அப், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது இதைஅறிந்தசூரமங்கலம் போலீசார், சம்பவ இடம் சென்று விசாரணை நடத்தினர்.

தாக்குதலில் காயமடைந்தநபர்யார்?, அவரை தாக்கிய 2 பேர் யார்? என தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.



காரிமங்கலம் வழக்கறிஞர் சங்கம் சார்பில் நீதிமன்றங்களில் இ–பைலிங் நடைமுறையை செயல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், வழக்கறிஞர் பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்தியும் உண்ணாவிரத போராட்டம் சங்கத் தலைவர் பெரியசாமி தலைமையில் நடந்தது.

# கார் மோதி டிரைவர் பலி!

அவிநாசி, டிச.11–

அவினாசியை அடுத்த முத்து செட்டிபாளையத்தைச் சேர்ந்தவர் மணிவண்ணன் (45). சீனிவாசன் என்பவரின் மகனான இவர், டிரைவராகப் பணிபுரிந்து வந்தார். இவருக்கு தமிழரசி என்ற மனைவியும், இரண்டு பெண்குழந்தைகளும் உள்ளனர்.

நேற்று முன்தினம் மணிவண்ணன் வீட்டில் இருந்து வெளியே சென்ற நிலையில், அதன் பிறகு வீடு திரும்பவில்லை. இந்தச் சூழலில், அவினாசி பகுதியில் உள்ள ஜூனியர் குப்பண்ணா உணவகம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் ஒரு பிரேதம் கிடப்பதாக போலீசாருக்குத் தகவல் கிடைத்தது. இந்தத் தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார், உடலை மீட்டு விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில், உயிரிழந்தவர் மணிவண்ணன் என்பது உறுதி செய்யப்பட்டது. மேலும், அவர் கார் மோதி உயிரிழந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து, மணிவண்ணனின் உடல் உடற்கூறு ஆய்வுக்காக அவிநாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து அவினாசி போலீசார் வழக்குப்பதிவு செய்து, உயிரிழப்புக்கான காரணங்கள் மற்றும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை தேடி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



## கோவை மாநகரில் புதிய “கிரேட் ஸ்லீப் ஸ்டோர்” தொடக்கம்:

# தனது ரீடெய்ல் செயல்பாட்டை விரிவாக்கும் பெப்ஸ் மேட்ரெஸ்!

கோவை,டிச.11

கோயம்புத்தூரின் கணபதி பகுதியில் பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தனது புதிய பெப்ஸ் கிரேட் ஸ்லீப் ஸ்டோர்–ஐ தொடங்கி தனது ரீடெய்ல் வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இந்தியாவின் முன்னணி ஸ்பிரிங் மேட்ரஸ் பிராண்டான பெப்ஸ், ஏற்கனவே கோவை நகரில் விற்பனை அமைப்பை கொண்டிருந்த நிலையில், இந்த புதிய ஸ்டோர் அதன் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்துகிறது. இந்த ஸ்டோரினை நிறுவனத்தின் துணைத் தலைவர் ராஜேஷ் திறந்து வைத்தார்.

சுமார் 1100 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள புதிய ஸ்டோர், ஒரு அனுபவ ரீதியான ஸ்லீப் ஸ்டுடியோவாக செயல்படுகிறது. இங்கு ஸ்பிரிங், ஃபோம் மற்றும் காயர் மெத்தைகள், ப்ரீமியம் தலையணைகள், மெத்தை பாதுகாப்பு உறைகள் மற்றும் உறக்க துணைப் பொருட்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்கள் தயாரிப்புகளை நேரடியாக பரிசோதித்து, பயிற்சி பெற்ற பணியாளர்களிடம் விளக்கங்களைப் பெற்று, தங்களுக்கான சரியான உறக்கத் தீர்வுகளை தேர்வு செய்ய முடியும். கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்ட இந்த நிறுவனம், ‘மார்வெலஸ் மிடில் ஸ்பைன் கார்டு’, ‘ஜீரோ டிஸ்டர்பன்ஸ்’ போன்ற காப்புரிமை பெற்ற தொழில்நுட்பங்களையும், இந்தியாவின் முதல் இன்னர்ஸ்பிரிங் மெத்தை எனப்படும் ‘ஸ்பைன் கார்டு’ தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி வருகிறது.



நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு சேமிப்பு கிடங்கில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. அங்கு முதல் நிலை சரிபார்ப்பு பணி இன்று முதல் தொடங்குகிறது .அதன்படி அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடன் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆய்வு நடத்தினார்.

# தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கம் சார்பில் பெண் விவசாயிகள் மாநாடு நடந்தது!



கிருஷ்ணகிரி,டிச.11

கிருஷ்ணகிரிகிழக்குமாவட்டம், கிருஷ்ணகிரி ஸ்ரீ தேவராஜ் மஹாலில் தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கம் சார்பில் நடைபெற்ற பெண் விவசாயிகள் மாநாட்டில் தமிழ்நாடு விவசாய துறை அமைச்சர் எம் ஆர் கே. பன்னீர்செல்வம் தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமானஆர்சக்கரபாணிமற்றும்கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன்மற்றும்கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஒசூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான ஒய் பிரகாஷ் ஆகியோர்களுடன் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகள் வேளாண்மைதுறைக்கு கொண்டு வந்த திட்டங்கள் குறித்து சிறப்புரையாற்றினார்கள்

இந்நிகழ்வில் தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கம் நிர்வாகிகள், பெண் விவசாயிகள், கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள்,ஒன்றிய ,நகர, பேரூர் கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள், ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், துணை தலைவர்கள் ,அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழக மூத்தமுன்னோடிகள், கழக தோழர்கள் என அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



பெருந்துறை அருகே சுங்கசாவடி பகுதியில் த.வெ.க. தலைவர் விஜய் பரப்புரை செய்ய உள்ள இடம் தேர்வு பணியை அமைப்பு செயலாளர் கே.ஏ.செங்கோட்டையன் பார்வையிட்டார்.

# தூத்துக்குடியில் நாளை தனியார் வேலை வாய்ப்பு முகாம் -கலெக்டர் அறிவிப்பு!

தூத்துக்குடி,டிச.11

நாளை சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது என தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத், தெரிவித்துள்ளார்.



வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டு வருகிறது. டிசம்பர் மாதத்திற்கான சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற 12.12.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கோரம்பள்ளம், தூத்துக்குடியில் வைத்து நடைபெற உள்ளது. இம்முகாமில் வேலையளிக்கும் (Employer) தனியார் நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனத்திற்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்து கொள்ளலாம் எனவும், பத்தாம் வகுப்பு, பிளஸ் 2, பட்டப்படிப்பு, BE, DIPLOMA, ITI மற்றும் கணினிபயிற்சி கல்வித் தகுதியுடைய பதிவுதாரர்கள் கலந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகுதியுள்ள தனியார் துறையில் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் தங்களது பயோடேட்டா (Bio data ) மற்றும்கல்விச்சான்றிதழ்களுடன்தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் வேலைநாடுநர்கள் தனியார்துறை நிறுவனங்களில் பணிநியமனம் செய்யப்படும் நேர்வில் வேலைவாய்ப்பு அலுவலக பதிவுமூப்பு ரத்து ஆகாது இம்முகாமில் கலந்து கொள்ள விரும்பும் வேலையளிப்போர்கள் (Employers) மற்றும் வேலைநாடுநர்கள் (Jobseekers) அனைவரும் www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களது விபரங்களை பதிவுசெய்தல் வேண்டும். மேலும் வேலைவாய்ப்பு முகாம் தொடர்பான பல்வேறு தகவல்களை பெற THOOTHUKUDI EMPLOYMENT OFFICE என்ற Telegram Channelல் இணைந்தும் மற்றும் இவ்வலுவலக தொலைபேசி எண்.04612340159ஐ தொடர்பு கொண்டும் பயன்பெறலாம் என தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் .இளம்பகவத்,தெரிவித்துள்ளார்.